பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : வைகாசி 31 (13—6—68) வியாழன் ★ வெளியூர் : ஆனி 1 (14—6—68) வெள்ளி [இதழ் : 301

அண்ணாவின் நினைவு அலை!

சென்னை, ஜுன் 13—

"வருங்கால மக்கள் வாழ்வினைச் செம்மையுறச் செய்பவர்கள் அரசியல்வாதிகளா? அல்லது ஆசிரியர்களா?" என்று முதலமைச்சர் அண்ணா அவர்களைக் கேட்டபோது 'அரசியல்வாதிகளாகிய நாம், சில நேரங்களில், மக்களின் எதிர்காலத்தைச் சிறப்புடையதாக்குகிறோம்' என்று நினைக்கிறோம்; ஆனால் நம்முடைய வருங்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்வதிலேயே நாம் வெற்றிபெற முடியவில்லை' என்று பெரும் சிரிப்புக்கிடையே கூறினார்.

கூட்டுறவுத் துறையில் ஆதிக்கம்

அதிகாரிகளையும் ஆட்டிப்படைக்கும் விசித்திரம்

சலுகை அடிப்படையினால் திறமை பலியாகிவிடுகிறது

உருவான பலன்கள் ஏற்பட துரிதமான நடவடிக்கை அவசியம்— மத்திய அமைச்சர் செகசீவன் ராம் வற்புறுத்தல்

சென்னை, ஜூன் 12—

"கூட்டுறவுச் சங்கங்களை, செல்வாக்குப் பெற்ற சிலர், தங்களது சொந்த நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வதாகப் பரவலாகப் புகார் கூறப்படுகிறது; கூட்டுறவுத் துறையில் ஒரு சிலர் ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காகச் சில மரபுகளையோ, சட்டங்களையோ உருவாக்க வேண்டும்.

"இத்தகைய ஆதிக்கச் சக்திகள் ஊடுருவதற்குக் காரணம், கூட்டுறவுச் சங்கங்களின் அன்றாட நிர்வாகத்திற்கும்—கொள்கை நிர்ணயத்திற்கும் வேறுபாடு இல்லாமலிருப்பதும், 'சட்ட விதிகள் பின்பற்றப்படுகின்றனவா' என்று போதிய அளவில் மேற்பார்வை செய்யாததும்தான் காரணமாகும்.

"சில நேரங்களில் இந்த ஆதிக்கக்காரர்கள், அதிகாரிகளை ஆட்டிவைக்கும் அளவுக்கும் பலம் பெற்றுவிடுகிறார்கள்!

"மேற்பார்வை அதிகாரிகளின் தரம், அவர்கள் நியமிக்கப்படும் முறையைப் பொறுத்தது. சலுகை அடிப்படையினால், திறமை பலியாகிவிடுகிறது! எனவே, கூட்டுறவுச் சங்க அதிகாரத்தை உருவாக்குவதற்குத் துரிதமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்"

என்று, மத்திய அரசின் உணவு-விவசாய-கூட்டுறவுத்துறை அமைச்சர் செகசீவன் ராம் அவர்கள், முதலமைச்சர்கள் மாநாட்டில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கத்தில் ஏற்பட்டுள்ள

சிந்தித்துச் செயல்படத் தவறினால்...

இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற முதலமைச்சர்கள்-கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில்

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சிந்தித்துச் செயல்படத் தவறினால், குறைகள் மேலோங்கி உருவாகிய பலன்களை அழித்துவிடும்.

கூட்டுறவு இயக்கத்தின் பலன், மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகின்றன; ஒரே மாநிலத்திற்குள்ளும் அது பரவலாக இல்லாமல் சில பகுதிகளில் அதிகமாகவும், சில பகுதிகளில் சொற்பமாகவும் இருக்கின்றன.

இலட்சியம் ஈடேற முடியாதென்றால்....

சிறிய விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறை நிச்சயம் உதவ வேண்டும். இப்போதுள்ள கூட்டுறவு அமைப்புக்களால் இந்த இலட்சியம் ஈடேற முடியாதென்றால், அவர்களுக்கெனத் தனிக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைப்பது அவசியமாகும்."

(பேச்சின் பிற்பகுதி பின்னர்)

தமிழகக் காங்கிரசார்மீது மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

'பிற்போக்கு முறை'யில் செயலாற்றும் நிலை கண்டு மனம் குமுறுகிறார்

தூத்துக்குடி ஜூன் 12—

'தமிழகத்திலுள்ள காங்கிரசுக்காரர்கள் தி. மு. க. அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுவதில் அதிக ஆர்வம் கொண்டிருக்கிறார்களே தவிர, தங்களுடைய கட்சியைச் சார்ந்த அமைச்சர்களை வரவேற்கக்கூட அவர்கள் வருவதில்லை"

என்று மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள், இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில், தமிழக காங்கிரசுக்காரர்களைக் குற்றம்சாட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசாங்கத்தில் பொறுப்பேற்றிருக்கும் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த அமைச்சர் ஒருவர் முதன் முதலாகத் தென்னாட்டிற்கு வருகைதரும்போது தென்னாட்டில் உள்ள காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த ஒருவராவது கட்சிக் கொடியைப் பிடித்தோ மலர் மாலை அணிவித்தோ, அவரை வரவேற்க முன்வராதது எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது."

'மக்கள் இயக்கமாக மலர கூட்டுறவுத் துறைக்குப் புத்துயிரூட்ட வேண்டும்'

'ஒரு சிலரின் ஆதிக்கத்தை உடைத்தெறிவதுமிக அவசியம்'

அமைச்சர் செ. மாதவன் வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 12—

"கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு சிலரின் ஏகபோக ஆதிக்கம் நிலவுவதைத் தகர்த்தெறிய வேண்டும்.

"கூட்டுறவு இயக்கத்தைப் பொதுமக்கள் இயக்கமாக மலருவதற்குப் புத்துயிரூட்ட வேண்டும். அதை அரசியல் ஆதிக்கத்திலிருந்து மட்டுமன்றி, 'சமூக விரோதி களின் ஆதிக்கத்திலிருந்தும் விடுவிக்க வேண்டும்.

"பொருளாதாரத் துறையில் பிற்பட்ட நிலையிலுள்ளவர்கள் கூட்டுறவு இயக்கத்தின மூலம் முழுப் பலனை அனுபவிக்க முடியவில்லை"

என்று, தமிழகக் கூட்டுறவுத் துறை அமைச்சர் செ. மாதவன் முதல்மைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக் காட்டினார்.

சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய முதலமைச்சர்கள் மாநாட்டின் இரண்டாவது நாளன்று கூட்டுறவுத் துறை பற்றி விவாதம் நடைபெற்றது. அமைச்சர் செ. மாதவன் அவர்கள், விவாதத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரையாவது:-

"கூட்டுறவுத்துறை, ஏழைகளின் நன்மைக்காக ஏற்பட்ட ஒன்றாகும்; அரசியல்—சமூகக் குறுக்கீடுகள் இல்லாமல் இருந்தால்தான், கூட்டுறவுத் துறை மூலம் நல்ல பலன் ஏற்படும்.

"ஏழைகளின் நன்மைக்காக அது ஏற்பட்டது என்றாலும், அத்துறையில், குறிப்பிட்ட ஒரு சிலரே ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதால், ஏழைகளுக்கு உரிய கடன்கள் கிடைக்காமல் தடுக்கப்படுகிறது; இதைத் தடுப்பதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்; அந்தச் சட்டத்தில், தங்கு தடையின்றி அனைவரும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகும் வாய்ப்பும், தொடர்ந்து ஒரு சிலரே அதிகாரம் வகிப்பதைத் தடுக்கவும், தணிக்கை முறைகளும் உருவாக்கப்பட வேண்டும்.

சிறிய நீர்ப்பாசனம், நில வளர்ச்சித் துறையில் அரசாங்கமே நேராகக் கடன் வழங்குவதை நிறுத்திவிட்டு, நீண்டகாலக் கடன்களை நில அடமான பாங்கிகள் மூலம் வழங்கத் தமிழக அரசு முடிவுசெய்திருக்கிறது. ரிசர்வ்பாங்கிதானகவே கொள்கைகளை வகுத்து-கடன் வழங்குவதில் அனாவசியமாகக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதற்கு மாறாக, அரசு நிர்ணயிக்கும் கொள்கை முடிவுகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தலாம்; விவசாயிகள் நலன்களைப் புறக்கணிக்கும் வகையில் கொள்கைகளை வகுக்க ரிசர்வ் பாங்கியை அனுமதிக்கக் கூடாது."

இடதுசாரிக் கட்சிகளுக்குத் தடையுத்தரவு

'சட்ட விரோதக் கட்சிகள்' என அறிவிப்பு

பாரிஸ், ஜூன் 13—

இரண்டு இரவுகளாகத் தொடர்ந்து வன்முறைச் செயல்கள் ஏற்பட்டிருப்பதை யொட்டித் தீவிரப் புரட்சி இயக்கங்களான ஏழு இடதுசாரிக் கட்சிகளைச் சட்ட விரோதக் கட்சிகள் [illegible] பிரெஞ்சு அரசு அறி[illegible] கிறது.

கடந்த திங்கள் அ[illegible] பட்டு 22-ந் தே[illegible] விருக்கும் தேசிய [illegible] றத் தேர்தல்களை யொட்டி நாடு முழுவதிலும் நடத்தப்படும் எல்லா ஆர்ப்பாட்டங்களுக்கும் பிரெஞ்சு அரசு தடை விதித்திருக்கிறது.

"தனியாகப் படைகள் வைத்துச் செயல்படும் இச்சங்கங்கள் சட்ட விரோதமானவை" என்று 1936-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

எட்வர்ட் கென்னடிக்குப் பாதுகாப்பு

இரகசியப் போலீசுக்கு ஜான்சன் உத்தரவு

வாஷிங்டன், ஜூன் 13—

மறைந்த இராபர்ட் கென்னடியின் இளவல் எட்வர்ட் கென்னடியின் உயிருக்கு எத்தகைய ஆபத்தும் ஏற்படாதவகையில் கண்காணிக்குமாறு இரகசியப் போலீசுத் துறைக்கு அமெரிக்க அதிபர் ஜான்சன் உத்தரவிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மறைந்த கென்னடியின் குடும்பத்தில் தற்போது உயிரோடிருக்கும் செனட்டர் எட்வர்ட் கென்னடியைப் பாதுகாக்க இருபதுக்கும் மேற்பட்ட இரகசியப் போலீசார் கண்காணிப்புப்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 31 (13—6—68) வியாழன்

செகசீவன் ராம் சூடு!

"ஒரு மாநில அரசு செய்யக்கூடிய நல்ல காரியத்தைப் பாராட்டுவது எப்படித் தவருகும்?

"நான் கேட்டுக் கொண்டபோது கேரளத்துக்கு உணவுத் தானியம் தந்து உதவ அண்ணுதுரை ஒப்புக் கொண்டபோது, நான் அதைப் பாராட்டினேன். முன்பும் அப்படி செய்திருக்கிறேன்—எதிர்காலத்திலும் அப்படிச் செய்வேன்.

"தி. மு. க. அரசு, சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசாகும். அது ஏதாவது நல்லது செய்தால், 'அது நன்ருக இருக்கிறது' என்று நான் கூறவேண்டும். நல்ல காரியங்களைப் பாராட்டுவேன்; ஏதாவது தவறு நடந்தால் அதைக் கண்டிக்கவும் செய்வேன்."

சென்னை நகருக்கு வருகை தந்திருந்த மத்திய உணவு அமைச்சர் செகசீவன் ராம், தமது பல்வேறு அலுவல்களுக்கிடையில், நகரத்திலிருக்கின்ற காங்கிரசுக் கட்சியினரையும் சந்தித்திருக்கின்ருர்.

தங்களைச் சந்தித்த மத்திய உணவு அமைச்சரை, காங்கிரசுக் கட்சியினர், பன்னிப் பன்னிக் கேள்விகளைக் கேட்டிருக்கின்றனர். அக்கேள்விகள் பெரிதும், முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்ததேயாகும்.

கழக ஆட்சியைப் பாராட்டிய மத்திய அமைச்சர்களில், உணவு அமைச்சர் குறிப்பிடத்தக்கவராவார். கழக ஆட்சிக்கு உணவு அமைச்சரிமிருந்து கிடைத்த பாராட்டுத்தான், சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவரான கருத்திருமன் அவர்களை எரிச்சலடையச் செய்திருக்கிறது. அந்த எரிச்சலின் காரணமாக—'கழக ஆட்சியை வெளிப்படையாகப் பாராட்டிவிட்டிருக்கின்ருர்' என்ற ஒரே ஒரு காரணத்துக்காக—'மத்திய அமைச்சரவையிலிருந்து செகசீவன் ராம் அவர்களை வெளியேற்றிவிட வேண்டும்' எனக் கூறுகின்ற அளவுக்குக் கருத்திருமன் அவர்கள் செயல்பட்டிருக்கின்ருர்.

நேற்று இதே பகுதியில்கூட, மத்திய உணவு அமைச்சர்மீது தமிழகச் சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் சீறிப் பாய்ந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கின்ருேம். அதையே மீண்டும் ஒரு முறை குறிப்பிட வைத்திருக்கிறது—உணவு அமைச்சரைச் சந்தித்த காங்கிரசுக் கட்சியினர், அவரிடம் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் கூறிய தெளிவான விளக்கங்களும்.

"தி. மு. கழக அமைச்சரவையை மத்திய உணவு அமைச்சர் பாராட்டுவது ஏன்?"

இந்தக் கேள்வியை, உணவு அமைச்சரிடம் பல காங்கிரசுக் கட்சியினர், திரும்பத் திரும்பக் கேட்டிருக்கின்றனர்—என்று, செய்தியாளர் குறிப்பிட்டிருக்கின்ருர்.

கழக ஆட்சியை, மத்திய உணவு அமைச்சர் பாராட்டுவதற்குரிய காரணத்தை—மக்களாட்சி பற்றிய முழு உண்மையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டவர்களாக இருந்திடும்பட்சத்தில்—தாங்களாகவே காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் புரிந்துகொண்டிருக்க முடியும். உண்மையைப் புரிந்துகொண்டிருக்கின்ற நிலையில், 'கழக ஆட்சியை, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மத்திய உணவு அமைச்சர் பாராட்டலாமா' என்ற கேள்வி, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உள்ளங்களில் எழுவதற்கு இடமே இல்லை.

மக்களாட்சியைப் பற்றித் தேனெழுகப் பேசுவது; சனநாயகம் பற்றி வானளாவப் புகழ்வது; அதேநேரத்தில், தங்களைக் கொண்ட காங்கிரசுக் கட்சி ஒன்றுதான் இருந்திடவேண்டும்; நிலையாக என்றென்றும் ஆட்சிபீடத்தில் அந்தக் கட்சியே இருந்திட வேண்டும்; எந்த அரசியல் கட்சியும் தலை தூக்கக்கூடாது—வலிவு பெற்ற வளர்ச்சி பெறக்கூடாது என்பதற்கான சிறு செயல்களில் தீவிரமாக ஈடுபடுவது;—இதைத்தான்—இந்த ஒன்றைத்தான் அன்றுமுதல் இன்றுவரை, 'பெருந் தலைவர்கள்' என விளம்பரப் படுத்தப்பட்டவர்களிலிருந்து சாதாரண காங்கிரசுக் கட்சியினர் வரையில், தங்கள் அரசியல் பணியாக—சனநாயகப் பணியாகச் செய்துவந்திருக்கின்றனர்.

இத்தகைய பாழ்பட்ட மனப்போக்கின் விளைவாகத்தான்—கழக ஆட்சியை மத்திய உணவு அமைச்சர், பாராட்ட வேண்டியதற்காகப் பாராட்டியிருப்பதைக் கண்டு தாங்கிக்கொள்ள முடியாமல் தவியாகத் தவிக்கின்ற பரிதாப நிலைக்கும், கழக ஆட்சியைப் பாராட்டிய உணவு அமைச்சர்மீது பாய்கின்ற இழி நிலைக்கும், 'பாராட்டியது ஏன்?' எனப் பன்னிப் பன்னிக் கேட்கின்ற அவலநிலைக்கும் காங்கிரசுக் கட்சியினர் தங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

கழக ஆட்சியை—ஒரு மாற்று அரசியல் கட்சியின் ஆட்சியை—காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் பாராட்டுவதும், புகழ்வதும் பஞ்சமாபாதகங்களில் ஒன்று எனத் தீர்மானித்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு அரசியல் பண்பிழந்தவர்களாகக் காங்கிரசுக் கட்சியினா உள்ளனர்.

தாங்கள் பெற்றிருக்கின்ற தவருன கண்ணேட்டத்தின் விளைவாக, 'தி. மு. கழக அமைச்சரவையை மத்திய உணவு அமைச்சர் பாராட்டுவது ஏன்?' என்ற கேள்வியை, பாராட்டிய மாபெரும் 'குற்றத்தை'ச் செய்திருக்கின்ற தம்மிடமே திரும்பத் திரும்பக் கேட்ட தமிழகக் காங்கிரசுக் கட்சியினருக்கு—'நல்லறிவு ஏற்படுத்த வேண்டும்' என்ற உயர்ந்த நினைப்பில்—துவக்கத்தில் எடுத்தாளப்பட்டிருக்கின்ற விளக்கத்தை, உணவு அமைச்சர் செகசீவன் ராம் தந்திருக்கின்ருர்.

கட்டாய ஆரம்பக் கல்வி எப்போது?

நிதி ஒதுக்குவதில் டெல்லியின் அலட்சியப் போக்கு

அரசியல் சட்டத்தைச் சுட்டிக்காட்டி அறிஞர் அண்ணு குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 11—

கிராமப் பகுதிகளிடம் அதிக அனுதாபம் காட்டி கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசுகையில், வருவாய் தேடிக்கொள்வதில் கிராமப் பகுதிகள் நகரப் பகுதிகளுடன் ஒப்பிடுமிடத்து—சாதகமான நிலையில் இல்லாததைச் சுட்டிக்காட்டி, 'தமிழகத்தில் மட்டுமில்லாமல் மற்ற எல்லா மாநிலங்களின் நிலையும் இவ்வாறுதான் இருக்கிறது' எனக் குறிப்பிட்டார்

கல்விக்காக மத்திய அரசு நிதி ஒதுக்குவதில் உள்ள ஒரு முரண்பாட்டையும் அவர் எடுத்துரைத்தார்; கல்லூரிப் படிப்புக்கும் உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கும் மாநில அரசுக்கு மத்திய அரசு போதிய பணம் ஒதுக்குகிறபோதிலும், ஆரம்பக் கல்விக்கு ஒன்றுமே ஒதுக்குவதில்லை என்றும், அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவுப்படி ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் ஆரம்பக் கல்விக்கு மத்திய ஆட்சியிடமிருந்து போதிய உதவி கிடைத்தாலன்றி, கிராம மக்களிடையே கட்டாயக் கல்வி திட்டத்தை அமலாக்குவது சிரமம் என்றும் குறிப்பிட்டார்.

இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள், சமுதாய நலத் திட்ட—ஊராட்சித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டவர்களை தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி வரவேற்ருர்.

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

மத்திய அமைச்சர் செகசீவன் ராம், மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினுர்.

ஒத்துழைப்பு அவசியம்

முதலமைச்சர் அண்ணு அவர்கள், மாநாட்டில் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

'கிராமப் பொருளாதாரத்திற்கு அதிகப் பணம் செலவிட வேண்டிய கட்டத்தை அடைந்துவிட்டோம். இதைச் செய்தால் விவசாயம், கால்நடை வளர்ச்சி ஆகியவை பன்மடங்கு பெருகும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இதைச் சாதிப்பதற்கு மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்குமிடையே முழு ஒத்துழைப்பு அவசியம்.

அதிகாரிகள் கடமை

இந்தத் திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் அதிகாரிகள், தொண்டுள்ளம் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

இந்த இலாகாவை நிர்வகிக்கும் அமைச்சர் விழிப்புணர்வு கொண்டவராகவும், கிராம மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களது குறைகளைக் கேட்டு சுமூகமாகவும் துரிதமாகவும் தீர்த்துவைக்கும் திறன் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

இந்த வேண்டுகோளுக்கிணங்கி மத்திய உணவு—விவசாய அமைச்சர், கிராமப் பகுதிகளுக்கு அதிகப் பணம் ஒதுக்கிக் கொடுத்தால், சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் துரிதமான முன்னேற்றமடைவது இயலக்கூடும்.

கருத்து வேற்றுமைக்கு என்ன காரணம்?

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சமுதாய நலத் திட்ட அமுலில் சில தொல்லைகள் உள்ளன. அதிகாரிகளுக்கிடையேயும்—அதிகாரச் சார்பற்றவர்களுக்குமிடையே அவரவர் பங்கு என்ன என்பது பற்றி கருத்து வேற்றுமை உள்ளது.

ஏராளமான உத்தியோகப் பற்றற்றவர்கள், 'எங்களுக்கு நிர்வாக அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்' என்று விரும்புகிருர்கள்; அதிகாரிகளோ, 'இது, அரசாங்கப் பணம் ஏராளமாக செலவிடப்படும் துறையாதலால், அச்செலவுக்கு நாங்கள், அரசுக்கும், தனிக்கை அதிகாரிகளுக்கும் பதில் சொல்ல வேண்டியிருப்பதால், எங்களிடம் மட்டுமே நிர்வாக அதிகாரம் இருக்கவேண்டும்' என்று கூறுகிருர்கள்.

இதிலிருந்து, அரசாங்க அதிகாரிகளிடம் மட்டுமே நிர்வாக அதிகாரம் இருக்கமுடியும் என்று ஆகிறது.

இருப்பினும், உத்தியோகச் சார்பற்றவர்கள், சமுதாய நலத் திட்ட சாதனைகளில் பங்கு உணர்ச்சி பெறுவதற்கேற்ப வசதிகள் செய்து தரப்பட வேண்டியது அவசியம்.

பணச் செலவுக்கான பொறுப்பில் தலையிடாமல் அதிகாரச் சார்பற்றவர்களுக்கு வாய்ப்பை அதிகரித்தால் பிரச்சினைக்கு நல்ல பரிகாரம் ஏற்படும்.

உபரியான பதவிகள் ஏராளமாக இருந்தன!

சென்ற ஆண்டு தி. மு. கழக அரசு பதவியேற்றவுடன், இந்த இலாகாவில் உபரியான பதவிகள் ஏராளமாக இருப்பதாக சில நிபுணர்கள் கூறினர். ஒரு சமயம், 'அப்பதவியை குறைக்கலாமா' என்று அரசு ஆலோசித்தது; அப்படிச் செய்வதால் பெருத்த அளவு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்ற காரணத்தால், உபரியானவர்களை மேலும் உபயோகமான முறையில் பயன்படுத்துவதற்கு வழிவகைகளை அரசு ஆராய்ந்து வருகிறது; அதாவது, அவர்களுக்கு அதிக வேலை தரப்பட்டு மேலும் பயன்படுத்தப்படுவார்கள்.

நிலைமையை எப்படிச் சமாளித்துத் தீருவது?

இந்தச் சந்தர்ப்பத்தில் கிராமப் பஞ்சாயத்துக்கள் பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இம் மாநிலத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்தின் அளவு மிகச் சிறியது. பொருளாதார அடிப்படையில் கட்டுப்படியாகக் கூடிய அளவுடையவையன்று.

கிராம விளக்குகள், துப்புரவு ஆகிய வசதிகளுக்குப் பஞ்சாயத்தால் போதிய பணம் ஒதுக்க முடியவில்லை என்பது கண்கூடு. இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது? செலவைக் குறைத்தா அல்லது வருமானத்தை அதிகரித்தா?—இதுபற்றி ஆலோசிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு எழுத்தர் நியமித்தால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 45 இலட்சம் செலவாகும். அவர்களுக்குப் போதிய வேலையும் இராது.

பஞ்சாயத்துக்களுக்குப் போதிய பணம் ஒதுக்க முடியாத காரணத்தாலேயே கிராம நலத் துறையில் அதிகம் சாதிக்க இயலவில்லை.

நிதி உதவி போதுமா?

[illegible] ல் ஊராட்சி ஒன்றிப்பு [illegible] செலவிடப்படும் ரூ. [illegible] ல் ரூ. 22 கோடி [illegible] ல்விககு மட்டும் [illegible] றது; பாக்கியுள்ளவை மற்ற பல்வேறு தேவைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

தண்ணீர் வழங்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிப்புக்கும் ரூ. 15,000 மட்டுமே ஒதுக்கப்படுகிறது; 80,000 மக்கட் தொகைக்கு இந்த நிதி உதவி போதவே போதாது.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்

(4-ம் பக்கம் பார்க்க)

'கழக அமைச்சரவையை மத்திய உணவு அமைச்சர் பாராட்டுவது ஏன்?' என்ற கேள்வியைக் கேட்ட அதே காங்கிரசுக் கட்சியினர், வேறு ஒரு கேள்வியையும் கேட்டிருக்கின்ருர்கள்.

ரோம் நகரில் நடைபெற்ற உலக நாடுகளின் உணவு விவசாய நிறுவனத்தின் மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய அரசுத் தூதுக் குழுவில், தமிழக உணவு அமைச்சர் மதியழகன் அவர்கள் இடம் பெற்றிருந்ததைக் குறித்தும் மத்திய உணவு அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

அதற்கும், கேள்வி கேட்ட காங்கிரசுக் கட்சியினரின் கன்னத்தில் அறைவதுபோன்ற விளக்கத்தை மத்திய உணவு அமைச்சர் செகசீவன் ராம் தந்திருக்கின்ருர் :—

"அது உத்தியோகபூர்வமான தூதுக்குழு; 'உணவு அமைச்சர்' என்ற முறையில் மதியழகன் அக்குழுவில் இடம்பெற்றிருந்தால், அதில் தவறு எதுவுமில்லை. அவர், தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்க அமைச்சராவார்."

இந்த அரிய விளக்கத்தைத் தந்த அளவுடன் உணவு அ[illegible]சர் மனநிறைவு பெற்றுவிடவில்லை. காங்கிரசு எரியுள்ளத்தி[illegible]குச் சுருக்கெனத் தைக்கும் முறையில், சிந்தனையைத் தூ[illegible] கீழ்வரும் கேள்வியையும், தம்மைக் கேள்வி கேட்ட கா[illegible]காரர்களிடம் அவர் வீசியெறிந்திருக்கின்ருர் :—

"இன்று மத்தியில் காங்கிரசல்லாத அமைச்சரவை இருந்து, தூதுக் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்குவதில் ஒரு மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள காங்கிரசு ஆட்சியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் உங்களுக்கு எப்படி இருக்கும்?"

உணவு அமைச்சர் இந்தக் கேள்வியைக் கேட்டதும், கேட்டுக் கொண்டிருந்த காங்கிரசுக் கட்சியினர் முகம் அசடு வழிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதுபற்றி செய்தியாளர்கள் தகவல் தரவில்லை.

—கா. க.

செல்வி மல்லிகாவின் 'யாழ் நங்கை'

பொன்னில் செய்த பூ!

சித்திரக் கலைக்குப் பெருமை தரும் சித்தன்னவாசல் பற்றிய சரித்திரச் சம்பவங்களுக்கான பின்னணி ஒன்றினைக் கொண்டு செல்வி மல்லிகா, தமது 'அன்னை கலைக் குழு'வினருடன் தந்துள்ள இரண்டாவது நாட்டிய நாடகம்—'யாழ் நங்கை.'

பன்மொழிப் புலவரின் நூலொன்றின் தலைப்பு இந்த மணம் வீசும் முயற்சிக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது, மலரின் பெயரைக் கொண்ட மல்லிகாவுக்குக் கிடைத்துள்ள பேறுதான்!

இரட்டைச் சொற்களைக் கொண்ட தலைப்புகள் செல்வி மல்லிகாவின் நாட்டிய நாடகத்துக்கு ஆகிவந்த ஒன்றாகிவிட்டன முன்பு—'சித்திரப் பாவை'; இப்போது—'யாழ் நங்கை'; வேறு வேறு சொற்களல்ல -- ஒன்றோடொன்று இயைந்த வார்த்தைகள்!

சித்திரத்தையும் பாவையையும், யாழையும் நங்கையையும் வேறுபடுத்திப் பார்க்க முடியுமா?

இதைப்போலவேதான் நிகழ்ச்சியும்! நாட்டியமும் நாடகமும் இணைந்தது!

அரங்கேற்ற நிகழ்ச்சிக்குத் தலைமையேற்ற தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் பொருத்தமாகக் குறிப்பிட்டபடி, தனித் தனியே நடைபெற்று வந்த நாட்டியத்தையும், நாடகத்தையும் மிக நல்ல முறையில் இணைசது நாட்டிய நாடகமாகத் தந்து வெற்றியும் கண்டிருக்கின்றனர்—அன்னை கலைக் குழுவினர்!

சரித்திரத்தின் ஏடுகளில் ஒதுங்கியும், ஒதுக்கப்பட்டும் இருந்து வரும் சுவையான நிகழ்ச்சிகள—பயனுள்ள தகவல்கள—இலக்கிய நயத்துடன் இப்படித் தரப்படுவது, பொதுமக்கள் அளவில் நல்ல பலனுள்ள பாடங்களைத் தரும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

அஜந்தாவுக்கு இணையான சித்தன்னவாசலைக் கண்டு வியப்பதும், பாராட்டுவதும், வெறும் கண்கள் காட்டும் சுவைதான்!

ஆனால், அந்த சித்தன்னவாசலைப் படைத்த பல்லவ மன்னன் மகேந்திர வர்மனின் கலைத் திறமையையும், அதைப் பரிமளிக்கச் செய்ய—அரசன் என்ற நிலையையும் கடந்து—அவன் மேற்கொண்ட சுடும் பயணங்கள், கொடிய அனுபவங்கள் ஆகியனவற்றையும அறிந்து கருத்து விளக்கம்பெற—பழம் பெருமை அறிய 'யாழ் நங்கை' போன்ற கலைப் படைப்புகள் பெரிதும் பயன்படத்தக்க ஆக்கங்களாகும்.

பன்மொழிப் புலவர் அவர்கள் சுருக்கமாக -- ஆனால், எண்ணி எண்ணிப் பாராட்டும் வகையில் சிறப்பாகக் கூறியபடி, வீரப் பெருமையுடன் கலைப் பெருமையும் சேர்ந்து விளங்கியவன் பல்லவ மன்னன் மகேந்திரன்!

அந்த நாள் காஞ்சிக்குப் புகழ் சேர்த்த பல்லவ மன்னனை நாயகமாகக்கொண்ட நாட்டிய நாடகம். இந்த நாள் காஞ்சிக்குப் பெருமை படைத்துக் கொண்டிருக்கும் அண்ணா அவர்கள் தலைமையில் அரங்கேறியது பல வகைகளிலும் பொருத்தமே!

ஏனெனில், தனக்கிருக்... சியல் தனிப் பெ... சிறப்பான கலைப் ... யும் கொண்ட... கண்ட அண்ணா!

சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த பெரிய உண்மைகளைக் காட்டும் சிறியதோர் சம்பவத்தைக் கொண்டு படைக்கப்பட்ட முயற்சி என்றாலும், இக்காலத்துக்கும் ஒத்துவரும் பல கருத்து விளக்கங்கள் இடம் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.

" மக்களுக்காக மன்னனா? மன்னனுக்காக மக்களா?"

" ஏர் பிடிக்கும் காலத்தில், மக்களை, போருக்குத் தயாராக்குவதா?"

" சத்தத்தைக் கொடுத்தவன் கடவுள்; அதில் சங்கீதத்தைக் கண்டவன் கலைஞன்."

என்பன போன்ற கருத்துடைய பாடல்கள், கவனத்தில் பதிகின்றன!

நாட்டிய நாடகத்தில் பாத்திரங்கள் பேசுவதோ, பாடுவதோ கிடையாது. பின்னணியில் பாடிக்கொண்டிருப்பவர்களுக்குத் தக்கவாறு பயிற்சியைப் பிரதிபலிக்கவேண்டும் என்பதனைப் பார்க்கும்போது தான், 'கூட்டு முயற்சி எந்த அளவுக்குத் தேவை' என்பது புலப்படும்.

சித்திரப் பாவை'யில் பெற்ற பாராட்டு, மேலும் முதிர்ச்சியைத் தேடித் தந்திருக்கிறது---கலைக் குழுவினருக்கு!

'புலிகேசி'யாக வரும் தோழியர், வீர நடிப்புக்கு இலக்கணம் படைக்கிறார்!

ஆடல் அரங்குகளில்—திரைப் படங்களில் ஆண்கள் போடும் பெண் வேடம், கேளிக்கைக்கு மட்டுமே பயன்படும்; ஆனால் இந்த நாட்டிய நாடகத்தில் திருமதி தனலக்குமியின் புலிகேசிப் பாத்திரப் படைப்பு, ஆண்களின் பாராட்டுக்கு உரியதாகிறது

என்றால், அதைவிட வேறு உரைகல் தேவையில்லை!

'யாழ் நங்கை' என்ற தலைப்பினைத் தந்து வாழ்த்துச் செய்தி கேட்டபோதுகூட, சிலம்புச் செல்வர் ம. பொ. சி., தனக்கு 'மாதவி'தான் கவனத்துக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

நெல்லைச் சிறப்புக் கூட்டத்தில் ரூ. 12,222 வசூல்

தென்காசி இடைத் தேர்தல் நிதிக்கு அளிக்கப்பட்டது

தென்காசித் தொகுதி இடைத் தேர்தல் நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புக் கூட்டத்தில், ரூ. 12,222 வசூலாயிற்று!

ஜூலை 9-ஆம் நாள் நெல்லை சென்ட்ரல் திரையரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, நெல்லை மாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ. நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் பஜீத், ஆலடி அருணா எம்.எல் ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வசூலான தொகையை நகராட்சித் தலைவர் பஜீத், அமைச்சர் கருணாநிதியிடம் அளித்தார்.

வேளாண்மை துறையில் தொழில் நுட்பப் புரட்சி

உலகில் அரிசி உற்பத்தி உயர்வு

நம்பிக்கையற்ற நிலைமைக்கு இனி இடமில்லை!

விளைச்சல் அதிகம் தரும் புது நெல் இனங்கள், மூன்று கண்டங்களில் வரவேற்கப்படுகின்றன.

தமிழகத்தில் தஞ்சை உள்பட ஆசியாவின் பலவிடங்களில் உச்ச அளவில் விளைச்சல் தருகின்றன இந்தப் புதிய வகைகள்.

ரோம் நகரில் ஐ. நா. உணவு வேளாண்மை நிலையத்தின் பரிசீலனைக் குழு ஒன்றின் கூட்டத்தில், 'நடப்பு ஆண்டில் உலக நெல் விளைச்சல் ஒரு புதிய உச்ச அளவான 18 கோடி மெட்ரிக் டன்னை அடைந்துள்ளது' என்று மதிப்பிடப்பெற்றது.

இந்த மதிப்பீட்டில் சீனப் பெருநிலம், வட கொரியா, வட வியட்நாம் ஆகியவற்றின் விளைச்சல் சேர்க்கப்படவில்லை.

நடப்பு ஆண்டு விளைச்சல் 1966-ம் ஆண்டு விளைச்சலைவிட 13 சதவிகிதம் அதிகம்; 1964-ம் ஆண்டு விளைச்சலான 17.07 கோடி டன்னைவிட 5 சதவிகிதம் அதிகம். 1964-ம் ஆண்டு விளைச்சல் அப்பொழுது ஒரு புதிய சாதனையாகவிருந்தது.

விளைச்சல் அதிகம் தரும் நெல் வகைகளைப் பயிர் செய்வதும், இரசாயன உரம் போன்ற வளங்கள் அதிகம் போடுவதும் எல்லாம் சேர்ந்து, வேளாண்மையில் தொழில் நுட்பப் புரட்சி ஒன்றைத் தோற்றுவித்துள்ளன.

48 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட அந்த ஆராய்ச்சிக் குழுவில் டாக்டர் சீபோர்க் என்பவர் சொன்னதாவது :—

"புதிய வகைப் பயிர்களில் 'ஐ. ஆர். 8' வகை நெல்லும் ஒன்று. பிலிப்பைனில் நெல் விளைச்சல் ஐந்து மடங்கு பெருகியதற்கு இதுதான் காரணம். இப்பொழுது இது இந்தியாவில் தமிழகம் உள்ளிட்டு ஆசியாவின் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

'மக்கள் தொகைப் பெருக்கமும், அதனுடன் சேர்ந்துள்ள பிரச்சினைகளும் சில காலத்துக்குப் பெரும் பிரச்சினைகளாகவே தோன்றும்; ஆனால் சிலர் நினைப்பதுபோல், நிலைமை நம்பிக்கை இல்லாததாகிவிடவே இல்லை."

நுண்ணியகிருமியால்நேரிடும்கொடுமை

அறிகுறிகள் ஏதும் தெரியாமல் ஈரலைப் பாதிக்கும் விபரீதம்

மஞ்சள் காமாலை நோயின் அறிகுறிகள்-- முன்னெச்சரிக்கையுடன் செயலாற்றும் முறைகள் பற்றி விளக்கம்

" சமுதாயத்தில் பெருமளவில் மஞ்சள் காமாலை நோய் பரவியுள்ளபோது சில போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்" என்பதை மத்திய சுகாதாரக் கல்வி நிலையம் வற்புறுத்தி, வேண்டுகோள் ஒன்று தந்திருக்கிறது; அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :—

ஒவ்வொருமுறை மலம் கழித்துவிட்டு வந்தபின்னரும் கைகளை நன்கு கழுவி சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

உணவில் ஈ மொய்க்காமல் மூடி வைக்க வேண்டும். உணவில் கை வைக்கும் முன்னரோ, உணவுண்ணுவதற்கு முனனரோ கைகளை நன்கு கழுவி சுத்தம் செய்துகொள்ள வேண்டும். வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவை உட்கொள்வதே சிறந்தது.

புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவை மட்டுமே உட்கொள்ள வேண்டும். பாலையும் தண்ணீரையும் நன்கு கொதிக்க வைக்க வேண்டும்.

நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளை, முழுதும் குணமாகும் வரையில் பள்ளிக்கு அனுப்பலாகாது.

நோய் பரவியுள்ள பகுதியில், பாதுகாக்கப்பட்ட பருகுநீர் விநியோகமும், கழிவு நீர், குப்பை முதலியன முறையாக அகற்றப்படுதலும் நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

தின்பண்டங்கள், பழத் துண்டங்கள் முதலியன ஈ மொய்க்குமாறும், தூசு படியுமாறும் திறந்து வை...து விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும்."

நோயின் தன்மைகளும், அதன் பிற குறிப்புக்களும் வருமாறு :—

மஞ்சள் காமாலை என்பது நம்முடைய ஈரலைப் பாதிக்கின்ற ஒரு நோய். இந்த நோய் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பது நுண்ணிய கிருமி ஆகும். நோய் சாதாரணமாக இருக்கும்போது எந்த அறிகுறியும் வெளியே தெரிவதில்லை. நோய் கடுமையானால் கண்களும், சில நேரங்களில் தோலும் மஞ்சளாகி விடுகின்றன.

மஞ்சள் காமாலை நோய் உலகெங்கும் காணப்படுகிறது. அண்மை ஆண்டுகளில் இந்தியாவிலும், மற்ற சில நாடுகளிலும் இந்த நோய் பெரும் அளவில் பரவி வருகிறது. பொதுவாக, ஆண்டு முழுதும் இந்நோய் இங்குமங்குமாகத் தோன்றியபோதிலும் குறிப்பிட்ட பருவத்தில்—அதாவது ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மிகுதியாகப் பரவுகிறது.

மக்கள் நெருக்கமான பகுதிகளிலும், சுகாதாரமும் சுத்தமும் இல்லாத பகுதிகளிலும் மஞ்சள் காமாலை மிகுதியாகவும், வேகமாகவும் பரவுகிறது.

நோய் எப்படி பரவுகிறது?

மஞ்சட் காமாலை, நோயாளியிடமிருந்து—நெருங்கிப் பழகுகின்ற மற்றவருக்கு எளிதில் பரவுகிறது.

நோயாளியின் மலத்தினால் பாதிக்கப்பட்ட தண்ணீர், பால், உணவு முதலியவற்றின் மூலம் காமாலை பரவுகிறது.

நோயாளியின்மலத்தில் மொய்த்த ஈக்கள் உட்கார்ந்த உணவு, பால் முதலியவற்றின் மூலமாகவும், அழுக்கடைந்த விரல்கள், பிற பொருள்கள் ஆகியவற்றின் மூலமாகவும் இந்நோய் பரவும்.

"காமாலை நோய் இலேசாகத் தாக்கியுள்ளபோது, தோல், மஞ்சள் நிறமாகத் தோன்றாமலுமிருக்கலாம்; என்றாலும், இத்தகைய நோயாளிகளும், கடுமையாக நோய் பாதிக்கப்பட்டவர்களைப் போன்றே நோய் தொற்றுவதற்குக் காரணமாகின்றனர்,

நோயின் அறிகுறிகள்

காமாலை தொற்றிக்கொண்ட பின்னர், நோயின் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிவதற்கு மூன்று முதல் ஆறு வார காலமாகும். காய்ச்சல், பசி சின்மை, குறிப்பாக கொழுப்புப் பொருட்களைக் கண்டாலே வெறுப்பு, வாந்தி வருவது போன்ற உணர்வு, வாந்தி எடுத்தல், தலைவலி, வயிற்றின் வலது பக்கத்தில் வலி முதலானவை இந்த நோயின் அறிகுறிகளாகும். களைப்பும், பலவீனமும் குறிப்பிடத்தக்க அறிகுறிகளாகும்.

நோய்க்கு ஆளாவோர்

எல்லோருக்கும் இந்த நோய் வரலாம். நோயாளியின் வயதைப் பொறுத்து நோயின் அறிகுறிகள் கடுமையாகவோ, இலேசாகவோ இருக்கலாம். கைக் குழந்தைகளுக்கும், இளம் பிள்ளைகளுக்கும் இந்த நோய் மிகவும் இலேசாகவே தாக்கும். வயது வந்தவர்களையும், கர்ப்பிணிகளையும் இந்நோய் கடுமையாகத் தாக்குவதுடன், நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்தும் இருக்கும்.

நோயின் கடுமை

அநேகமாகப் பலருக்கு இது சாதாரணமாக வந்து போகலாம்; மீண்டும் கடுமையாகாமல் முழுவதுமாகக் குணமாகி விடுவது உண்டு. சில நேரங்களில் மிகவும் கடுமையாகப் பாதித்துத் தொடர்ந்த ஈரல் நோய்க்குக் காரணமாகிவிடுவதும் உண்டு.

நோயாளியின் கடமை

நோயாளி உடனடியாக டாக்டரிடம் சென்று சிகிச்சை பெற வேண்டும். டாக்டர் சொல்லுகின்ற வரையில் படுக்கையிலிருந்தபடி நன்கு ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். வெகு விரைவில் குணமாகிவிட்டவர்கள் மறுபடியும் நோயினால் பீடிக்கப்படவும் கூடும். டாக்டர் கூறும் உணவையே கண்டிப்பாக நோயாளி உட்கொண்டு வர வேண்டும்.

தடுப்பு முறை

இதுவரை இந்த நோய்க்கு எந்த ஒரு தடுப்பு முறையும் (தடுப்பு மருந்தும்) கண்டுபிடிக்கப்படவில்லை. நோயாளியும், நோயாளியுடன் பழகுவோரும் மிகவும் தூய்மையாகவும், துப்புரவாகவும் இருப்பதன் மூலம் மேலும் பரவாமல் தவிர்க்கலாம்.

சிகிச்சை

இந்த நோய்க்குக் குறிப்பிட்ட சிகிச்சை ஏதும் இல்லை. நோய்க் கிருமி கொல்லி மருந்து வகைகளும், சல்பா மருந்துகளும் இந்த நோய்ச் சிகிச்சைக்கு எந்தப் பயனும் அளிப்பதில்லை. எந்த ஒரு மருந்தும் இல்லாத இந்த நோய்க்கு, படுக்கையில் ஓய்வு, அடிக்கடி மருத்துவச் சோதனை, சிறப்பான உணவு (மிகுதியாகப் புரதச் சத்தும், மாவுப் பொருளும் உள்ள உணவு வகைகள்) அளிப்பது தவிர வேறு வழியில்லை. சொழுப்புப் பொருள் அடங்கிய உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; ஆரஞ்சு, எலுமிச்சை முதலான பழச்சாறு உட்கொள்வது நல்லது.

மறவாதீர்!

உங்கள் குடும்பத்தில் எவருக்கேனும் மஞ்சள் காமாலை நோயின் அறிகுறிகள் தென்பட்டால், உடனே டாக்டரை அணுகுங்கள்!

வீட்டிலுள்ள மற்றவர்களுக்கும் நோய் பரவுவதைத் தடுக்க, நோயாளியின் கழிவுப் பொருட்களை எரித்துவிடுவதுடன், நோயாளியை மிகவும் தூய்மையாகவும், துப்புரவாகவும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

நோயாளியை நெருங்கிக் கவனித்துக்கொண்ட ஒவ்வொரு முறையும், நோயாளியைக் கவனித்துக்கொள்பவர், தாம் கைகளை மிகவும் சுத்தமாக கழுவிக்கொள்ளவேண்டும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள

14--6--68

சென்னை ௭1-வது வட்டம்

மோரீஷியஸ் தீவுக்குச் சென்று திரும்பும் அமைச்சர் சத்திய வாணிமுத்து அவர்கட்கு வரவேற்பு; மாலை 7 மணிக்கு; தலைவர்: டி. கே. பொன்னுவேலு பி.ஏ.; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.பி., கோவை செழியன் பி.ஏ., என். ஜி. சிவகுமாரன், சி. சுப்பையா.

களக்காடு

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: என். பி. எம். அப்துல்காதர்; பேசுவோர்: பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி, வழக்கறிஞர் ஏ. எல். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

ச. மீனாட்சிபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பொது மந்தைத் திடலில்; தலைவர்: இரா. கிருஷ்ணன்; பேசுவோர்; ஜி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., உ. ம. கண்ணுச்சாமி, என். சுப்பு, இரா. சுப்பிரமணியம்.

அரக்கோணம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மோசூர் ரோடு மைதானத்தில்; தலைவர்: கே. பாபு; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., ஏ. எல் சி. கிருஷ்ணசாமி, டி. இராசு பி.ஏ.பி.எல்., ஜி. எல்லப்பன், ஏ. எஸ். உசேன், சி. பத்மநாபன் எம்.சி.

சென்னை 69-வது வட்டம்

குறள் நெறி மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு புதுப்பேட்டை சுப்புராய முதலி தெருவில் (கண் மருத்துவமனைக்கு அருகில்); வரவேற்பு: மறைமலை; துவக்க உரை: வெ. சு. மணி எம்.ஏ.; தலைவர்: காஞ்சி. நெடுஞ்சேரன்; சிறப்புரை: அமைச்சர் மா. முத்துசாமி, சி. இலக்குவனார் எம்.ஏ., எம்-ஓ.எல்., க. அறிவழகன் எம்.எல்.சி., மா. கி. தசரதன் எம்.ஏ., வேலம்மையார் எம்.ஏ., எம். எஸ். அப்துல் காதர் (முன்னாள் மேயர்), நாகூர் மீரான் எம்.சி., என். கே. சாகுல் அமீது, அ. இராசன், டி. கே. இராசு.

15--6--68

மதுரை

33-வது வட்டார பகுத்தறிவுப் பாசறையின் சார்பில் மாலை 7 மணிக்கு சுப்பிரமணியபுரம் ஆர். எஸ். நாயுடு பூங்கா அருகில்; தலைவர்: ஜே எஸ். இரங்கநாதன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., கு. திருப்பதி, ஏ. ஆர். இராசன் பி.ஏ.பி.எல்.

நாகல் நகர்

மாலை 7 மணிக்கு தண்ணீர்த் தொட்டி அருகில்; தலைவர்: அ.பாலமுருகேசன் பி,ஏ.பி.எல்.: பேசுவோர்: என். எஸ். இளங்கோ, சிற்றுளி சுப்பிரமணியம், அ. தங்கவேலர், மா. ஆனந்தன்.

திருச்சி

14-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு வடச்கு ஆண்டார் தெருவில்; தலைவர்: ஏ. ஆர். சீனிவாசன்; பேசுவோர்: வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எம். எஸ். மணி, அன்பில தர்மலிங்கம், ஆர், நாகசுந்தரம் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

இராயநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு முள்ளியாற்றுப் பாலத்திற்கு அருகில்; தலைவர்: வி. இராமலிங்கம்; பேசுவோர்: அமைச்சர் எஸ். கே. சாதிக் பாட்சா, மன்னை ப. நாராயணசாமி, ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., வை. சுப்பிரமணியம், மற்றும் பலர்.

மேல்பட்டாம்பாக்கம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கந்தசாமி திடலில்; தலைவர்: கே. ஆர். சபாபதி; பேசுவோர்: டி. கே. சீனுவாசன், வி. கிருட்டிணமூர்த்தி எம்.பி., என். இராசாங்கம் எம்.எல்.ஏ., கே. ஆர். சபாபதி, கே. தியாகராசன்.

காங்கிரசு அமைச்சரின் தூண்டுதல்?

கழகக் கொடியைப் போலீசார் அகற்றினர்

காரைக்கால் வட்டத்தைச் சேர்ந்த நெடுங்காட்டில், 2-6-68 மாலை, சௌந்தராசா மில் எதிரில், நகர மன்றத்துக்குச் சொந்தமான இடத்தில் கழகக் கொடி ஏற்றப்பட்டது.

அந்தக் கொடியை, நெடுங்காடு பஞ்சாலை நிர்வாகத்தின் தூண்டுதல் பேரில் நெடுங்காடு காவல் நிலையத்தினரின் 9—6—68 அன்று மாலை 5-15 மணிக்கு அகற்றிவிட்டனர்.

இதை அறிந்து தி. மு. க. செயலாளர் அ. லூர்துசாமி காவல் நிலையத்திற்குப் போய்க் கேட்டதற்கு, 'என் வேலைதானே போகும்; அதைப்பற்றிக் கவலை இல்லை' என்று இறுமாப்பாகப் பேசினாராம் —போலீசுத் தலைமைக் கான்ஸ்டபிள்.

இந்தச் செயலுக்குப் புதுவை மாநில அமைச்சரே காரணம் என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சம் ரூபாய் ஒதுக்கினாலன்றி, எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க முடியாதென்பதே எனது கருத்தாகும்.

கண்டனக் குரல் எழுப்பியே தீருவர்

குடிநீர் வழங்கும் திட்டத்துக்கான ஒதுக்கீடு ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருகிறது; இதுபற்றி மறு ஆய்வு செய்து, போதிய பணம் ஒதுக்குவது அவசியம். இம்மாதிரி அடிப்படை வசதிகளைச் செய்து தராவிட்டால் கிராமவாசிகள் மிக விரைவில் கண்டனக் குரல் எழுப்புவார்கள்.

அதிக உதவி தர ஆவன செய்வீர்!

ஆரம்பக் கல்விக்காகத் தமிழக அரசு ஆண்டொன்றுக்கு ரூ 22 கோடி, செலவிடுகிறது; ஆனால் இந்தப் பளுவில் மத்திய அரசு பங்கு ஏற்கவில்லை.

பஞ்சாயத்துகளுக்கு ஆகும் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.57கோடி; ஆனால் அவை திரட்டும் வருவாயோ ரூ 8 கோடிதான். இது கூட, நிலவரி, கேளிக்கை வரி மீது கூடுதல் வரி விதிப்பதன் மூலம் கிடைக்கிறது; இவை எளிதில் பெருகும் வருவாய் இனங்கள் அல்ல. ஆனால், கல்விச் செலவோ ஆண்டுக்கு ஆண்டு பெருகுகிறது.

வருமானம் சம்பாதிப்பதில், கிராமங்களின் சக்தி குறைவு. நகராட்சிகள் தங்களது செலவாகிய ரூ. 12 கோடியைச் சமாளிக்க ரூ 10 கோடி வருவாய் திரட்டும் திறனுள்ளவை.

விரயங்களைத் தவிர்த்தால் அவை தன்னிறைவு பெறக்கூடும் என்றுகூடச் சொல்லப்படுகிறது.

ஆகவே, கிராமங்களுக்கு மத்திய அரசு அதிக உதவி செய்ய வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்."

வேதனை தரும் தீவிபத்து

அமைச்சர்கள் உடனடி உத்தரவு

கழகத் தோழர்களின் அரும் பணி

சென்னை, சூன் 13—

சென்னை வியாசர்பாடி பகுதியில் டிகாஸ்டர் சாலையிலுள்ள குடிசைப் பகுதிகளில் நேற்று பெருந் தீ விபத்து ஏற்பட்டு ஆயிரம் வீடுகளும்—குடிசைகளும் எரிந்து நாசமாகிவிட்ட செய்தியை வேதனையுடன் கூறவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

வியாசர்பாடிக்கு அருகிலுள்ள புளியந்தோப்பு, பெரும்பாலும் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியாகும். இப்பகுதியிலுள்ள மூன்று நகர்களும் எரிந்து சாம்பலாகி, கூரையில்லாத சுவர்களாகக் காட்சியளிக்கும் தோற்றம் எவர் மனதையும் உலுக்கிவிடும்.

இப்பகுதியில் வசிக்கும் பெரும்பாலோர், பி. அண்டு சி. ஆலை—இரயில்வே—மாநகராட்சி ஆகியவற்றில் பணியாற்றுபவர்களாவர்; தீ விபத்தினால் அவர்களுக்குப் பெரும் அளவில் சொத்து நட்டம் ஏற்பட்டிருக்குமெனக் கூறப்படுகிறது.

அ பகுதியைச் சேர்ந்த திரு.வி.க. நகரில் சென்ற ஆண்டில் கூட தீ விபத்துக்கள் ஏற்பட்டன; அதிலிருந்தே அவர்கள் இன்னும் மீளவில்லை; அதற்குள்ளாகவே இந்தத் துயரமிக்க தீ விபத்து ஏற்படடுள்ளது.

சுமார் 3 000 குடும்பங்கள்—15,000 பேர் வீடிழந்து தவிக்கின்றனர்; நல்லவேளையாக உயிர்ச் சேதம் ஏதுமில்லை; ஆனால் ஏராளமான கோழிகளும், சில ஆடு மாடுகளும் உயிரோடு வெந்து விட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர்கள் மு. கருணாநிதி அவர்களும், சாதிக் பாட்சாவும் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர்; தேம்பியழும் மக்களுச்கு உரிய உதவிகளை உடனடியாகச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தனர்; அருகிலுள்ள மாநகராட்சிப் பள்ளிகளில்—பார்ப்பதற்குப் பரிதாபமாகத் தோற்றமளிக்கும் அம்மக்கள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு மாநகராட்சி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட கழகத் தோழர்களும் மாநகராட்சி உறுப்பினர்களும் அமைச்சர்களின் ஆலோசனைக்கிணங்க உடனடியாகச் செயலாற்ற முனைந்துள்ளனர்; உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்; சீரணியினரும் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு அரும்பணியாற்றி வருகின்றனர்.

மாநகராட்சி மேயர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

சென்னைக் கலெக்டர், மாநகராட்சி ஆணையர், மற்றும் அதிகாரிகளும் தீ விபத்து ஏற்பட்ட இடத்துக்கு விரைந்து--நிலைமைகளைக் கண்டறிந்து--உரிய உதவிகள் வழங்குவது பற்றிக் கலந்தாலோசித்தனர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அது உண்மைதான்.

சித்திரப் பாவை'யில் 'மாதவி' யாகவே 'பிறந்து' நடிக்கும் செல்வி மல்லிகா, 'யாழ் நங்கை' யில் 'பரிவாதினி'யாகத் தோன்றி, இன்னொரு கலைப் படைப்பு தயாராகும் வரையில் இந்தப்பாத்திரத்தையே நினைவு கொள்ளும்வகையில் திறமையைக் காட்டியிருக்கிறார்.

சித்திரப் பாவை', 'யாழ் நங்கை' இரண்டு நாட்டிய நாடகங்களும், முழுவதுமே சோகமாகவோ, அல்லது முழுவதும் இன்பச் சூழ்நிலையிலோ இல்லை, இன்பமும துன்பமும், இரவும் பகலும் போல பாதிப் பாதி அமைந்திருக்கும் இந்த இரண்டாவது முயற்சியிலும், மல்லிகாவின் நடனத் திறமை ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது!

அரங்கேற்றம் என்பதனும் அல்ல—அரங்கேற்றம் [illegible] நத அரங்கும் போதுமான வ[illegible]சளற்றதாக இருந்ததுதான் குழுவினர் பெற்ற இடையூறுகள்—தயாரிப்பில் உள்ள குறைபாடுகள் அல்ல—என்பது, தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்களுக்குத் தரப்படும் பாராட்டாக அமைகிறது.

இயற்கை மணம் கமழும் எழில் மலரைப்போல் கலை மணம் வீசும் காவிய மலர் ஒன்றைத் தந்திருக்கும் மல்லிகா குழுவினரின் படைப்பினை, 'பொன்னில் செய்த பூ' எனப் புலவர் ஒருவர் வாழ்த்தியிருப்பதில், தவறென்ன இருக்க முடியும்?

—எஸ். ஆர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாமக்கல் தி. மு. க. கிளை

தலைமைக் கழக ஆணையாளர் கோ. செங்குட்டுவன்

நாமக்கல் தி. மு. க. கிளைத் தேர்தல்கள் 15—6—68 சனிக்கிழமை காலை 10 மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

நாமக்கல் கிளை--நாமக்கல் வட்ட நிர்வாகிகளும், தோழர்களும் தோழர் செங்குட்டுவன் அவர்கள் பணிக்கு உறுதுணையாக இருந்து தேர்தல்களைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

—தலைமைக் கழகம்
(தி. மு. க.)

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

சூன் 14: அரக்கோணம்; 15: மஞ்சக்கொல்லை (நாகை); 16 [illegible] அரக்கோணம்; 17: செ[illegible] விளாந்தகளத்தூர்; 18: செ[illegible]பட்டு.

க. அன்பழகன்

எம்.பி. சுற்றுப்பயணம்

சூன் 14: மாலை—களக்காடு; இரவு: ஏர்வாடி; 15: காலை—நெல்லை; மாலை—தமிழ்ச் சங்கம்; இரவு—திருவள்ளுவர் கழகம்; 16, 17: தென்காசித் தொகுதிக் கூட்டங்கள்; 18, 19: சென்னை; 20: சென்னை 99-வது வட்டம்; 21: பூவிருந்தவல்லி; 22: புதுவை; 23: நெய்வேலி; 24: திருச்செங்கோடு.

பாலர் அரங்கம்

ஜூன் 14 15, 16 தேதிகளில் மாலை 4-மணிக்கு

'தந்தையைத் தேடும் மகள்'

(ரஷ்ய கலர் படம்)

குமாரி விஜயா

கலை நிகழ்ச்சிகள்

சூன் 14: இளங்தோப்பு; 15: திருச்சம்பள்ளி; 16: கிளியனூர்; 17, 18: செம்பனார்கோவில் பகுதிகள்; 20: சென்னை; 22: திருச்சி; 23: பண்ணுருட்டி.

நிகழ்ச்சி தொடர்புக்கு:—
மு வரதராசன், செயலாளர், தென்னகப் பல்கலைக் குழு, 325, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5.

குழுக் கூட்டம்

"சென்னை 60-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் பொது உறுப்பினர் கூட்டம், 15—6—68 இரவு 9-மணிக்கு லாயிட்ஸ் சாலையில் உள்ள கே. எஸ். ஆர்ட்ஸ் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் கே. எஸ். தங்கவேல் அறிவிக்கிறார்.

மதுரை எம்.ஜி ஆர். மன்ற ஆண்டு விழா

மதுரை 44-வது வட்டார எம் ஜி. ஆர். மன்ற 12-வது ஆண்டு விழாவையொட்டி 14—6 68 காலை 10-மணிக்கு பழைய குயவர் பாளையம் சாலையில் (இலட்சுமி திரையரங்கின் பின்புறம்); எம். எம். முத்தரசு கொடியேற்றி வைப்பார்.

15—6—68 மாலை 7-மணிக்கு எம். எம் முத்தரசு தலைமையில் மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

எட்வர்ட் கென்னடிக்கு......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பணியில் ஏற்கனவே ஈடுபட்டிருப்பதாக ஜான்சன் சார்பில் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரம் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்க அதிபர் ஜான்சன் உத்தரவிட்டபோது, செனட்டர் எட்வர்ட் கென்னடிக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புப் பற்றி ஏதும் குறிப்பிடப்பவில்லை.

நியூயார்க் மேயரின் உயிருக்கும் ஆபத்து?

நியூயார்க் மேயரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று பயமுறுத்தப்பட்டிருப்பதால் அவருக்கு 24-மணி நேரமும் தனிப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

வருந்துகிறோம்

சென்னை, சூன் 13—

'நம் நாடு' அலுவலகத்தில் 'பைண்டர்' பிரிவில் பணியாற்றும் தோழர் எல். கோபால் அவர்களின் அன்னையார், நேற்றிரவு இயற்கையெய்திய செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவரது குடும்பத்தினருக்கு நமது இரங்கலை[illegible] ஆறுதலையும் உரித்தாக்கு[illegible]

—ஆசிரியர்

[illegible] மறைவுக்கு இரங்கல்

நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர் திரு. நேசமணி மறைவு குறித்து சென்னை குமரி மாவட்ட சங்கத்தின் சார்பில், தோழர் இராசப்பா அனுதாபம் தெரிவித்துள்ளார்.

திரு. நேசமணி அவர்கள், குமரி மாவட்டத்தைத் தமிழகத்தில் இணைப்பதற்காகப் போராடியதையும், அவர் ஆற்றிய அரும் பணிகளையும் அவர் பாராட்டியுள்ளார்.